செய்தி வெளியீடு எண்.365 நாள் 16.10.2006

# 16–10–2006 அன்று நடைபெற்ற 10வது அமைச்சரவைக் கூட்ட முடிவுகள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (16–10–2006) காலையில் பத்தாவது அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு :-

1. 1996ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பையேற்றவுடன் பத்தாண்டு காலத்திற்கு மேலாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்தியது மட்டுமல்லாமல் உள்ளாட்சி அமைப்புகள் யாவும் சுய ஆட்சி அமைப்புகளாக செயல்பட உயர் நிலை குழு ஒன்றை உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் அமைத்து அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்று நிதி மற்றும் உரிய பிற அதிகாரங்களை பகிர்ந்தளித்தது.

அதைப் போலவே இந்த முறையும் உள்ளாட்சி அமைப்புகள் மேலும் சிறப்பாக செயல்பட ஏதுவாக தேவையான அதிகாரங்களை வழங்குவது குறித்து உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், வல்லுநர்கள் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றினை உடனடியாக அமைத்து மூன்று மாதங்களுக்குள் அதன் பரிந்துரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்துவதென்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து அண்மையில் தமிழ்நாடு மூன்றாவது நிதிக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை அமைச்சரவை குழு ஒன்று பரிசீலித்து முடிவெடுப்பதென்றும் அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

**2. கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் குறித்து ஏற்கனவே ஒப்பந்தம் வழங்கப் பெற்ற ஒப்பந்தக்காரரை அழைத்து விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளை சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு சாதகமாக மாற்றிப் பெற்றிடும் வகையில் மறு பேச்சுவார்த்தை நடத்துவதென 30.6.2006 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் அமைக்கப்பட்டக் குழு நடத்திய பேச்சுவார்த்தையின்போது ஒப்பந்தக்காரர் ஏற்கனவே தாங்கள் குறிப்பிட்டிருந்த சராசரி குடிநீர் கட்டணத்தை ஒரு கிலோ லிட்டர் ரூபாய் 48.68 என்பதற்கு மாறாக ரூபாய் 48.66க்கு வழங்க முன்வந்ததின் பேரிலும், கூடுதலாக ஒரு கிலோ லிட்டருக்கு ரூ. 2.50 கேட்டதை விலக்கிக் கொள்ள ஒப்புக் கொண்டதாலும் அந்த நிறுவனத்திற்கே அனுமதி வழங்கிட அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.**

***

**வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**